

திருவண்ணாமலையில் சமூகநீதி அரசியலின் திசைகாட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.



பல முதன்மைத் திட்டங்களாலும், முற்போக்கு அரசியலாலும் தமிழ்நாட்டை இந்திய துணைக்கண்டத்தின் முன்னணி மாநிலமாக்கிய முத்தமிழறிஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டக் கழகம் சார்பில் போளூரில் அமைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து எந்நாளும் நம்மை வழிநடத்தும் கலைஞர் புகழ் ஓங்கட்டும் என்று சூளுரைத்தார். இந்நிகழ்வின் போது பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.









முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்தின் அடையாளமாகத் திகழும் மூத்த முன்னோடிகளைப் பெருமைப்படுத்திட, திருவண்ணாமலை மாவட்டத்தில் கழகம் வளர்த்த ஆயிரம் முன்னோடிகளுக்கு தலா ரூ.10 ஆயிரத்தையும், மகளிர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் என 10 ஆயிரம் பேர் பயனடையும் வகையில் நலத்திட்ட உதவிகளையும் கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி, தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகப் போராடி வரும் கழகத்தின் சாதனைகளை அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்த்து, நாற்பதையும் நமதாக்கிட கழகப் பணியை தொடங்கிடுவோம் எனத் திருவண்ணாமலையில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான உடன்பிறப்புகளிடையே உரையாற்றினார். உடன் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தந்த கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்த காட்சி.